

# தேவனிடத்தில் கிருபை பெற்ற மரியாள்

**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே!

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன். நாம் தேவனிடத்தில் கிருபை பெற்ற மரியாளைப் பற்றி தியானம் செய்வோம். (லூக்கா 1:28) தேவன் ஏன் மரியாளை தேர்வு செய்தார். நீதிமொழிகள் 31:28லே குணசாலியான பெண் என்ற பதம் பெண்களுக்கு சொல்லப்படுகிறது. குணசாலியான பெண் என்ற தகுதியிலே மரியாள் மிகவும் சிறந்த பொருத்தமான பெண்மணியாக இருக்கிறாள். தேவன் தம்முடைய இரட்சிப்பின் திட்டத்தை செயல்படுத்த, தேவனால் பயன்படுத்தப்பட்ட இந்தப் பெண்ணை பற்றி நாம் அறிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். மேலும் தேவன் ஒரு நபரை தேர்ந்தெடுப்பாரேயானால், தேவனுக்கு ஒரு நபர் பிரயோஜனமுள்ளவராயிருப்பார்களே என்றால் அவருடைய குணாதிசயங்களை நாம் கற்றுக் கொள்வது நமக்கு மிகவும் ஆசீர்வாதத்தை கொடுக்கும்.

**1. மரியாள் தன் சிந்தையை பயன்படுத்த அறிந்திருந்தாள்**

லுக்கா 1:29 “அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.” இந்த வசனங்களில் நாம் அறிவது மரியாள் தன் சிந்தையை பயன்படுத்த அறிந்திருந்தாள். நாம் நமது சிந்தனைகளை எதற்கு பயன்படுத்துகிறோம்? தேவனுடைய வார்த்தைகளை, வாக்குத்தத்தங்களை பற்றி சிந்திக்கவா? தியானிக்கவா? அல்லது உலக காரியங்களுக்கு மட்டுமா? சிந்தித்துப் பார்ப்போம்.

**2. மரியாள் தேவபக்தி நிறைந்த பெண்மணியாயிருந்திருக்கிறாள்**

லூக்கா 1:30 ‘‘தேவதூதன் அவளை நோக்கி மரியாளே பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.” இந்த வசனத்திலே, தேவனிடத்தில் பயபக்தியாக இருப்பது மரியாளின் பழக்கமாகவே இருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். தேவன் திடீரென்று இவளை கண்டுபிடித்து இந்தா இதை வைத்துக்கொள் என்று சொல்லி இவள் மீது திணிக்கப்பட்டதற்கு தகுதியுள்ளவளாக அல்ல இவள் : மாறாக, இவளுக்கு இந்த பொறுப்பைக்

கொடுப்பதற்கு இவள் தனக்குத்தானே அடிப்படையில் ஆயத்தமுள்ளவளாகவே இருந்தாள். பெண்களுக்கு தேவ பக்தி என்பது யாரும் சொல்ல தேவையில்லை. எந்த மதத்தைச் சேர்ந்த தேவ பெண்ணாக இருந்தாலும் தேவபக்தி என்பது பெண்களுக்கு இயற்கையான சுபாவம். ஆனால் இந்த தேவ பக்தியை சிறந்த தேவ பக்தியாக வளர்த்துக் கொள்ளும் பொழுது தேவன் பயன்படுத்தும் பாத்திரமாக மாற முடியும் எந்த ஒரு பெண்மணியும் தெய்வ பக்தி நிறைந்த ஒரு தாயாயிருக்கலாம், தேவ பக்தி நிறைந்த ஒரு நல்ல பாட்டியாக இருக்கலாம். தேவ பக்தி நிறைந்த ஒரு மகளாக இருக்கலாம். தேவ பக்தி நிறைந்த ஒரு மனைவியாக இருக்கலாம். ஆனால் அந்த உங்கள் தேவபக்தி, தேவன் உங்களை பயன்படுத்துகின்ற அளவுக்கு, நீங்கள் மற்றவர்களை விட, இன்னும் சிறப்பாயிருக்கும் பொழுது மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

### 3. மரியாள் தேவனுடைய வல்லமை மீது நம்பிக்கையுள்ளவளாயிருந்தாள்.

லூக்கா 1:31-33: இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் கர்த்தராகிய தேவன், தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்." மேலே உள்ள வசனங்கள் மரியாளுக்கு தேவன் மீதும் அவருடைய வல்லமையின் மீதும் நம்பிக்கை இருந்ததை இது நமக்கு அடையாளம் காட்டுகின்றது. இவளிடம் நீ கன்னியாயிருக்கும் போதே ஒரு குமாரனை பெறுவாய் என்று சொல்லிய வேளையிலே இவள் மனதிலே சிந்தனைகளும் எண்ணங்களும் வந்தாலும் தேவனாலே எல்லாம் ஆகும் என்று சொல்லப்பட்ட வார்த்தையை இவள் அப்படியே நம்பினாள்.

சில நேரத்திலே நம்முடைய வாழ்க்கையிலே நம்மாலே செய்ய முடியாததை, உங்கள் கணவனாலே செய்ய முடியாததை உங்கள் தகப்பனால் செய்ய முடியாததை, சமுதாயத்தின் பெரியோர்களால் செய்ய முடியாத காரியத்தை நீங்கள் தேவ பக்தியுடனே, தேவ வல்லமையின் மீது நம்பிக்கை வைத்து காத்திருப்பீர்களேயானால் தேவனுடைய வல்லமை உங்களுடைய வாழ்க்கையில் வெளிப்படும் என்பதை மரியாள் அடையாளப்படுத்துகின்றாள்.

### 4. மரியாள் தாழ்மையுள்ள பெண்ணாயிருந்தாள்

லூக்கா 1:38 "அதற்கு மரியாள் :

இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.” வெற்றி சிறக்கின்ற எந்த பெண்மணியுமே தாழ்மையுள்ள பெண்மணி. வீட்டில் நான்கு பேருக்கு முன்பாக தன் கணவனை மிரட்டுகிறவள் தாழ்மையுள்ள பெண்மணி அல்ல. சமுதாயத்தில் பெரிய அலுவலகத்தில் ஒரு பெரிய அதிகாரியாக இருக்கலாம். கால் மேல் கால் போட்டுக் கொண்டு பேசும் பெண்மணிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்படியிருந்தால் தான் ஆண்களுக்கு முன் நான் சமம் என்று நினைக்கிறார்கள். அப்படியிருப்பவர்களை குற்றவளி என்று நான் தீர்க்க வரவில்லை. ஆனால், நீங்கள் உங்கள் தகுதிக்கு ஏற்ற ஒரு பெண்ணாக இருப்பததை விட, தேவன் பயப்படுத்தும் ஒரு தகுதி



தேவனுடைய
சத்தியமாகிய செல்வ
புதையல்கள் நாம்
கண்டுபிடிக்கப்பட
காத்திருக்கின்றன.
ஆகையால் தினமும்
வேதத்தை படியுங்கள். (சங் 1:1-2)

நிறைந்த பெண்மணியாக இருக்க நீங்கள் விரும்பினால், தாழ்மை தேவை என்பதை மரியாள் இங்கே சொல்லி கொடுக்கிறாள். இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. அடிமை என்னும் வார்த்தை உதட்டிலிருந்து வரவில்லை. அடிமை என்ற வார்த்தை மனதில் பிறக்கின்ற ஆவியைச் சார்ந்தது. மரியாள் ஏற்க முடியாத ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்ட போது, இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. ஆண்டவரே உமது சித்தம் என்று சொல்லி கீழ்படிந்தாள்.

## 5. மரியாள் வேத வசனங்களை அறிந்திருந்தாள்

லூக்கா 1:46-55 வசனங்களிலே நாம் பார்க்கின்ற மற்றொரு குணம், அவள் வேதவசனங்களை அறிந்திருக்கிறாள். இயேசு தேவாலயத்திலே அதிகாரிகளிடத்திலே வேத வசனங்களை அப்படி பேசுகிறார். தன் சிறுவயதிலேயே சோதனை காலத்திலே அப்படி பேசுகிறார். அப்படியென்றால் இந்த மரியாளிடத்தில் இந்த குணம் இருந்தது. அது இயேசுவினிடத்திலே பிறந்து வளர்ந்தது. என் பிள்ளை ஜெபம் பண்ணவில்லை பைபிள் வாசிக்கவில்லை என் பிள்ளை சபைக்கு வரவில்லை என்று எத்தனையோ தாய்மார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பெண்ணானவள் முதலாவது தனக்குத்

தானே இந்த சுபாவங்களை வளர்த்துக் கொள்வாளேயானால், பிள்ளைகளுக்குள் அவள் பாலுட்டும் பொழுது, அவள் சோறுட்டும் பொழுது, அவள் சொல்லிக் கொடுக்கும் பொழுது பிள்ளைகள் கேட்டு அல்ல, பார்த்து கற்றுக் கொள்ளும் என்பதற்கு மரியாள் ஒரு முன்னுதாரனமாயிருக்கிறாள்.

**6. மரியாள் தேவ சித்தத்தை ஏற்க கூடியவளாகயிருந்தாள்.**

லூக்கா 2:35 '' உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்." எந்த ஒரு பெண்மணியும் எப்பொழுதுமே நல்ல வார்த்தை சொல்லுங்கள் என்று தான் எதிர்ப்பார்பாள். ஆனால் இந்த வேதாகமத்துப் பெண்மணியைப் பார்த்தீர்களா? தீமையானது சொல்லப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்கிறாள். உன் ஆத்துமாவை ஒரு பட்டயம் ஊடுருவும் என்று சொல்லப்பட்ட போது அப்படியா என்றும், எதிர்கால வாழ்க்கையில் உனக்கு பிரச்சனை இருக்கிறது "ஜாக்கிரதை" என்று சொன்ன போது ஏன் சபிக்கிறீர்கள்? ஏன் இப்படி சொல்கிறீர்கள்? என்று சொல்லவில்லை. அதனை ஏற்றுக் கொள்கிறாள். அப்படியென்றால், எனக்கு பிரச்சனை வரும் அதை சந்திக்க எனக்கு பெலத்தை, வீரத்தை தேவன் தருவார் என்று வீரமுள்ள பெண்மணியாயிருந்தாள். வீரமுள்ள பெண்மணி என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? நீ அழிந்து விடுவாய் என்று சொன்னபோது, உன்னை விட்டு வைத்தால் தானே நீ என்னை அழிப்பதற்கு அதனால் நான் உன்னை அழித்து விடுகிறேன் என்று வீரமுள்ள பெண்மணியாய் இவள் இருந்தாள்.

மேலும் அந்த பொறுப்பை ஏற்பதற்கு மன விருப்பமாய் இருந்தாள்(லூக்கா 2.41-51)சில பெண்களுக்கு ஏற்றுக் கொள்வாதென்பது விருப்பமாயிருக்காது.வேலைக்கு போனால் வீட்டு வேலையை கவனிக்க மாட்டார்கள்.வீட்டு வேலையை கவனித்தால் வெளி வேலையை செய்ய முடியாது என்பார்கள். வீட்டிலே சில முக்கியமான பிரச்சனை வந்தால் வெளி வேலையை சமாளிக்க முடியாது என்பார்கள். இதுவல்ல குணசாலியான ஸ்திரீ. குணசாலியான ஸ்திரீயாய் மாற்றிக் கொள்வதற்கு கொடுக்கப்படும் பொறுப்புக்களை மன விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கும் பொழுது நீங்களும் ஒரு மரியாளாய் மாற முடியும் என்பதை மரியாள் உங்களுக்கு சொல்லிக் கொடுக்கிறாள்.

**7. மரியாள் தேவ சித்தத்தை தன் வீட்டிலே செயல் படுத்துகிறவளாயிருந்தாள்.**

யோவான் 2:3 ‘‘திராட்சரசங்குறைவுப்பட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்.’’ இந்த மரியாளுக்கு தன் பிள்ளையின் மீது இருந்த போல நம்பிக்கை எந்த ஒரு பெண்மணியும் தன் பிள்ளையையும், புருஷனையும், தன் குடும்பத்தாரையும் நம்புகிறவர்களாயிருக்க வேண்டும். பிரச்சனை இருக்கலாம். நீங்கள் நினைத்தது நடக்காமல் போகலாம் ஆனால் நம்புங்கள். இயேசுவிடம் போய் சாப்பாட்டிற்கு ரசம் குறைந்து விட்டது. ஏதாவது உதவி செய்யும்படி அந்த அம்மா மகனிடம் போய் கேட்கிறார்கள். ஆனால். இயேசு என் வேளையிலே அதனை சரிசெய்வேன் நீங்கள் உங்கள் காரியங்களை பாருங்கள் என்பதை போல பேசினார். ஆனால் மரியாள் ஆண்டவர் என்ன பதில் சொல்லுவார் என்பதைவிட தான் ஒரு விஷயத்தை சொல்ல விரும்பினார்கள், அதனை சொன்னார்கள் ஒரு நல்ல வேதாகமத்து தாயான பெண்மணி தன் பிள்ளையை நம்புகிறாள் என்பதை மரியாள் நமக்கு அடையாளப்படுத்துகிறாள்.

மரியாளைப் பற்றி நிறைய விஷயம் பார்க்கலாம். யோவான் 19அதிகாரத்திலே கடைசி வரைக்கும் தன்னுடைய பணியிலே பொறுப்புள்ளவளாக இருக்கிறாள். அவருடைய சீஷர்கள் கூட அவர் சிலுவையில் அறையப்பட்ட போது அவரை விட்டு விட்டு ஓடி விட்டார்கள். ஆனால் தாய் கடைசி வரையில் இயேசுவின் அருகிலே இருந்தாள். இயேசு யோவானை பார்த்து சொல்கிறார், அதோ உன் தாய். தாயை பார்த்து சொல்கிறார், இதோ உன் மகன் என்று கடைசி வரைக்கும் குடும்பத்தோடே இருக்க வேண்டும். புருஷன் ஏதாவது சொல்லி விட்டால் உடனே கோபித்துக் கொண்டு போய்விடுவது. பிள்ளைகள் சரியில்லாவிட்டால் வெறுத்து போவது, அல்லது ஏதாவது ஒரு பிரச்சனை என்றால் உடனே வாழ்க்கையை முடித்துக் கொள்வது அல்ல. மாறாக தேவ சித்தமதை உங்கள் வீட்டிலே நீங்கள் நடப்பியுங்கள்.

இந்த தேவனிடத்தில் கிருபைபெற்ற மரியாளைப் போல நாமும் குணாதிசயமுள்ளவர்களாகவும் ஆவிக்குரிய பெலமுள்ளவர்களாயிருக்கவும் வாழ தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக.

அன்புடன்

**உங்கள் சகோதரன், PCPR**

# அந்நிய பாவி

J.C. Choate

அந்நிய பாவி என்பவன் நன்மை தீமை அறிந்து தேர்வு செய்யதக்க வயதை அடைந்தும் தன் சிருஷ்டிகருக்கு கீழ்படியாதவன், ‘‘அந்திய’’ என்ற பதத்திற்கு அயல்நாட்டுகாரன் வித்தியாசமானவன் அல்லது மற்ற தேசத்தின் குடிமகன் என்று அர்த்தம். தேவனுடைய சுவிஷேசத்திற்கு கீழ்படியாதவர்கள் பிசாசினுடைய ராஜ்யத்தின் குடிமக்கள். ஆகையால் இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு அந்நியர்கள்.

நல்லவர்கள் அல்லது தீயவர்கள் என்று எந்த பெயர் பெற்றவர்களாக இருந்தாலும் தேவனுடைய ராஜ்யத்தின் குடி மக்களாட்கும் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொள்ளும் வரை அவர்கள் ‘‘அந்நியர்கள்’’ தான். இருளின் ராஜ்யத்தில் இருந்து வெளிச்சத்தின் ராஜ்யத்திற்கு ஒருவரை கொண்டு வரும் நிபந்தனைகளும். பாவத்திலிருந்து ஒருவரை இரட்சிக்கும் நிபந்தனைகளும் ஒன்றே (கொலே 1:13,14)



நீங்கள் இயேசுவின் கண்ணோக்கோ பார்த்தால் தேவை நிறைந்த உலகை காணலாம். (ரோமர் 1:14-16)

கிறிஸ்துவிற்காக செய்யப்படும் எந்த செயலும் அற்பமானதல்ல (1கொரி 15:58)

ஒருவன் உலகத்தில் பிறக்கும் போது பாவமில்லாதவனாக பிறக்கிறான், அதே நிலையில் மரித்தால் அவன் தேவனுடன் இருக்க செல்கிறான் (மத் 18:3) அனால் குழந்தை வளர்ந்து தன் செயல்களுக்கு கணக்கு கொடுக்கும் பிராயத்தை அடைகிறது. அதாவது நன்மை எது தீமை எது என்று அறிகிறான். ஆரோக்கியமுள்ள மனதையுடைய எல்லாரும் நன்மை தீமை அறியதக்க பிராயத்தை அடைகிறவர்களாக வளர்கின்றனர். அந்த வயதை அடையும் போது அவன் பாவியாகிவிடுகிறான். பவுல் கூறுகிறார்” எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி (ரோ 3:23)

எல்லாரும் பாவம் செய்தவர்கள் என்றால் எல்லாருக்கும் இரட்சிப்பு அவசியம் தேவை, இழந்து போனவைகளை இரட்சிக்க தேவன் தன்குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். (யோ 3:16). ஆம் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து சிலுவையில் மரித்தார் நாம் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோ 5:8) கிறிஸ்து இல்லாத மனிதன் தன் பாவத்தில் மரிக்க வேண்டியதாகும் ஆனால் கிறிஸ்துவில் மட்டும் நமக்கு நம்பிக்கை உண்டு. இப்பொழுதும் தங்கள் பாவங்களில் மரிக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அது கர்த்தருடைய சித்தம் அல்ல. தங்கள் சொந்த தவறுதலே ஆகும். இரட்சிக்கப்பட விரும்புகிற எல்லாருக்கும் தேவன் இரட்சிப்பை வழங்குகிறார்.

கிறிஸ்துவின் ராஜ்யத்தில் கிரவேசித்த பின்பு ஒருவன் தொடர்ந்து அந்நிய பாவியாக எண்ணப்படுவதில்லை, பதிலாக தேவனுடைய ராஜ்யத்தின் குடிமகனாக மகா உன்னத தேவனுடைய பிள்ளையாக எண்ணப்படுகிறான். மேலும் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாக அதின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் சலுகைகளுக்கும் தகுதியுடையவனாகிறான். தேவனுடைய பிள்ளையாக இரட்சிக்கப்பட்டது மட்டுமல்ல தொடர்ந்து உண்மையுள்ள, நன்றியுள்ள பிரஜையாக ஜீவிக்கும் போது ஒரு நாள் தேவனுடன் நித்தியமாக வாழ பரலோக வீட்டை சுதந்தரித்து கொள்கிறான்.

பிரியமுள்ள பாவியே, பிசாசை பின்னால் தள்ளிவிட்டு இன்றே தேவனுக்கு கீழ்படியுங்கள்.

**தொடரும்**

**– தமிழில் C. கேமிலஸ்**

**விபத்தினை தவிர்க்க 5 வழிகள்**

1. அதிக வேகம் வேண்டாம் (வேக உச்ச வரம்பு 50 km).
2. கவனமின்றி வாகனத்தை முந்த வேண்டாம்
3. தொலைபேசியில் பேசிக்கொண்டு வாகனம் ஓட்ட வேண்டாம்
4. குடிப்போதையில் வாகனம் ஓட்ட வேண்டாம்
5. சமிக்கைகளை (Signals கவனித்து வாகனம் ஓட்ட வேண்டாம்.

# பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை பெற்றதற்கு ஒப்பாக இன்றும் பெற முடியுமா?

பிரியமானவர்களே, கடந்த இதழில் அப்போஸ்தலர்கள் வேறு, சீஷர்கள் வேறு என்று பார்த்தோம். சீஷர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலர்கள் மட்டுமே. அப்போஸ்தலர்களின் தனித்துவம் ஆராயப்பட வேண்டியவை. பெந்தெகோஸ்தே நாளில் ஞானஸ்நான அளவில் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் "120 பேர் என்பது" இன்று பரிசுத்த ஆவியால் நேரடியாக நடத்தப்படுவதாக கூறுவோரின் கூற்று. ஆகிலும் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்றதாக 14 ஆதாரங்களைக் கொண்டு திருமறை உறுதிப்படுத்துகிறது. இது "ஆவியின் அபிஷேகமல்ல" ஏனெனில், ஒலிவ எண்ணெய்யை தைலக் குப்பியிலிருந்து தலைமேல் ஊற்றுவதே அபிஷேகம் என்று திருமறை கூறுகிறது. பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதும் ஆவியானவரால் நிரப்பப்பட்டு, ஆவிக்குள் மூழ்க்கப்பட்டனர் (அப் 2:1-4) அந்நாளில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் பன்னிரெண்டுபேரா? 120 பேரா? வசனம் பதிலளிக்கட்டும்.

1. பரிசுத்த ஆவியைக் குறித்த வாக்குத்தத்தம் பன்னிரெண்டு பேருக்கு மட்டுமே (யோவான் 14:16, மத்தேயு 3:11, அப் 1:4,5). யோவான் 13-ம் அதிகாரத்திலிருந்து வாசித்தால் அன்று அப்போஸ்தலர்களுக்கு ஆறுதல் தேவைப்பட்டது. எனவே யோவான் 14:1-ல் ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'' என்றார். ஆதலால் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியின் வருகைக் குறித்து வாக்குத்தத்தம் அவர்களுக்குப் பண்ணப்பட்டது (14:16)

2. ''எல்லா காரியங்களும்'' அப்போஸ்தலருக்கு (12 பேருக்கு) மட்டும் இயேசு நேரடியாக போதித்தார் (யோவான் 14: 25,26. அன்றைக்கு இருந்த மற்றவருக்கோ அன்று உள்ள எவருகுமோ "எல்லாவற்றையும்" கிறிஸ்து நேரடியாக போதிக்கவில்லை.

3. எனவே பன்னிருவரும் மட்டுமே எல்லாவற்றையம் நினைப்பூட்டப்பட வேண்டியவர்களாயிருந்தனர். (யோ14:26) இன்று ஆவியானவரின் அபிஷேகம் பெறுவதாக கூறுவோர் வேதாகம

கல்லூகள் போய் பயின்றோ வேதத்தை கையில் எடுப்பதோ அவசியமற்றது. ஏனெனில் அவர்கள் பெறுவதாக கூறும் ஆவி அவர்களுக்கும் எல்லாவற்றையும் (திருமறை முழுவதும்) நினைப்பூட்ட வேண்டுமல்லவா? இன்று அவர்கள் திருமறையை வாசித்தும் மனப்பாடம் செய்தும் போதிப்பதும் ஏன்?

4. அப்போஸ்தலர்களை தவிர அந்த சத்திய ஆவியானவரை உலகம் காணவோ அவர்களுக்கு வெளிப்படுத்தபடவோ மாட்டாது என்று கிறிஸ்து சொன்னார். (யோ14:17,22,23) அதாவது அப்போஸ்தலருக்கு வாக்களிக்கப்பட்ட ஆவியானவரின் ஞானஸ்நான அளவை பன்னிருவரை தவிர வேற யாரும் பெற முடியாது.



எல்லாம் அறிந்த
தேவன் கையில் நாம்
அறிந்திராத எதிர்காலத்தை
ஒப்படைக்க ஒருபோதும்
கலங்க வேண்டாம்
( 1 பேது 5:6)

நல்ல அறிவுரையைக்
காட்டிலும் நல்ல முன்மாதிரி
மதிப்பு வாய்ந்தது (மத் 5:16)

மற்றவர்கள் வசனத்தை கைக்கொண்டாலே போதும் என்று இயேசு சொன்னார் (யோ 14:22,23)

5. அப்போஸ்தலருக்கு மட்டும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டியதின் அவசியம் என்ன? யோவான் 15:26,27 சாட்சியாக இருக்க வேண்டுமாயின் ஒருவர் கண்ணாரக் கண்டவைகளை மட்டுமே சாட்சி கொடுக்க முடியும் இந்த பன்னிருவரும் ஆதிமுதல் இயேசுவை கண்ணாரக் கண்டார்கள். அவருடனே இருந்து எல்லாவற்றையும் கற்றவர்கள் அப்போஸ்தலர்கள் (யோவான் 14:26, 15:27,1 யோவான் 1:1). இன்று அவரை யாரும் பார்த்ததுமில்லை; சாட்சி கொடுக்க பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் தேவையுமில்லை. (2 கொரிந்தியர் 5:16, யோவான் 5:34).

6. அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியினால் ‘‘சகல’’ சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தப்பட வேண்டியவர்களாயிருந்தனர். (யோவான் 16:13). வேதத்திலுள்ள புதிய ஏற்பாட்டின் ‘‘சகல’’ சத்தியத்துக்குள்ளும் அப்போஸ்தலர்கள் வழி நடத்தப்பட்டிருப்பார்களேயானால், இன்று பரிசுத்த ஆவியைப்

பெறுவதாகக் கூறுவோர் எந்த சத்தியத்திற்குள் வழி நடத்தப்படுகிறார்கள்? இது தேவனால் ஏற்புடையதா? (1 கொரிந்தியர் 4:6; வெளி 22:18,19). இவர்களின் எத்தனை புத்தகங்கள் திருமறையுடன் சேர்க்கப்பட்டுள்ளது?

7. பிதாவானவர் வாக்குத்தத்தம் பண்ணினதை, (பரிசுத்த ஆவியை) பெறும்படி அப்போஸ்தலர் எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளையிடப்பட்டனர் (லூக்கா 24:49, அப்போஸ்தலர் 1:4,5). அப்போஸ்தலர்களல்லாதோருக்கு இது எப்படி பொருந்தும்?

8. அப்போஸ்தலர் நடபடிகள் 1-ம் அதிகாரத்தை ஒவ்வொரு வசனமாக வாசியுங்கள். வச. 1-ல், பரிசுத்த ஆவியினால் ''அப்போஸ்தலருக்கு'' கட்டளையிடப்பட்டதாக வாசிக்கிறோம். வசனம் 3-லிருந்து 26-ம் வசனம் வரை ஒவ்வொரு செய்தியும் அப்போஸ்தலரைக் குறிக்கும் பொருட்டு "அவர்கள்", ''அப்போஸ்தலர்'' போன்ற பதங்கள், யூதாஸ்காரியோத் மரித்திருந்தபடியால் பதினொரு அப்போஸ்தலர்களைக் குறித்து பேசுகிறது. அப் 1:26-ல் யூதாஸிற்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலன் மத்தியா பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான் என்று வாசிக்கிறோம். இந்நிகழ்ச்சி இயேசு பரமேறிச் சென்ற நாளிலே, அவர் உயிர்த்தெழுந்ததிலிருந்து 40 -ம் நாளிலே நடந்தவை அப்போஸ்தலர் 2:1-4-ல் கூறப்படும் சம்பவம் இதிலிருந்து 10 நாட்கள் கழித்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து 50-ம் நாள் நடந்த சம்பவம் ''பெந்தா'' எனும் கிரேக்க வார்த்தைக்கு ''ஐந்து'' என்று பொருள். எனவே திருமறையின் முதல் ஐந்து புத்தகங்களும் (Pentateuch) பெந்தாதக் - பஞ்சாகமம் ஐந்து ஆகமங்கள் எனப்பட்டது. பெந்தெ - என்பது ஐம்பதை குறிக்கும். பெந்தெகோஸ்தே (Pentecost) என்பது 50-ம் நாள் பண்டிகை. ஆக கிறிஸ்து உயிர்த்தெழுந்ததிலிருந்து 40-ம் நாளில் மத்தியா தேர்ந்தெடுக்கப்பட்டான். (அப் 1:3-26). பெந்தெகோஸ்தே எனும் 50ம் நாளில் ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

9. அப் 2 : 1-4-ல் கூறப்படும் "அவர்கள்" எனும் பிரதிபெயர்ச் சொற்கள் அப். 1:26-ல் சொல்லப்படுகிற வசனத் தொடர்ச்சியில் கூறப்படும் 12அப்போஸ்தலர்களை மட்டுமே

குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் 1:26-யும் சேர்த்து வாசியுங்கள். அப்போஸ்தலர்களை மட்டுமே குறிப்பிடுவதை உறுதிபடுத்துவீர்கள்.

10. பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் தான் அன்று அந்நியபாஷையில் பேசினர், (வச. 5-11). "பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயர் அல்லவா'' என்பது 12 அப்போஸ்தலரை மட்டுமே குறிப்பிடுகிறது. (2:7) சீஷர்கள் வித்தியாசப்பட்ட இடங்களிலிருந்து வந்தவர்கள். அப்போஸ்தலர்களோ ''கலிலேயாவை'' மட்டும் சார்ந்தவர்கள்.

11. அப். 2:14ல் பேதுரு பதினொரு அப்போஸ்தலருடன் எழுந்து நின்று பிரசங்கித்தார், 120 பேரோடல்ல.

12. அப்போது கூடிவந்திருந்த பல தேசத்து ஜனங்களும் 120 பேரைப்பார்த்து கேள்வி கேட்கவில்லை. " பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து" "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டனர்" (அப் 2:37)

13. அன்று அப்போஸ்தலரின் உபதேசங்களில் மட்டுமே உறுதியாய்த் தரித்திருக்கச் செய்தார்கள் (அப். 2:42) இன்று அந்த உபதேசத்தில் கலப்படம் செய்யப்படுவதால், கிறிஸ்தவத்தின் உறுதித்தன்மை குறைகிறது.

14. அன்று அப்போஸ்தலர்களால் மட்டுமே அற்புத அடையாளங்கள் நடப்பிக்கப்பட்டன (அப்.2:43).

15. ஆஸ்திகளை விற்று விசுவாசிகள் எல்லாருக்கும் பயனளிக்கும் வகையில் " அப்போஸ்தலருடைய பாதத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். (அப்4:37)

இத்தனை ஆதாரங்கள் பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பன்னிரெண்டுபேர் மட்டுமே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் என நிரூபிக்கும் போது, எதைக் கொண்டு 120 பேர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதாகக் கூற முடியும்? அப்போஸ்தலர்களைப் போல இன்று தாங்களும் "பெந்தெகோஸ்தே நாள் ஆவியைப் பெறுவதாக பிதற்றுகின்றனர். இன்று அப்போஸ்தலர் எவருமில்லை, அப்போஸ்தலரைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்றவரும் எவருமில்லை .ஏன்?

பதில் காண காத்திருங்கள்...

**இ.ஏ. ஆறுமுகம்**,
திண்டுக்கல்

கதைச்சுருக்கம்

# யோபுவின் சரிதை

- சகோ. P.R. சாமி (பெங்களூர்)

நாம் வாழும் இந்த உலகம் பலப்பல பிரச்சனைகளால் நிறைந்துள்ளது. நாம் தாயின் வயிற்றில் உருவாக்கப்படும் போது தாய்க்கு பிரச்சனை, வளரும் பருவத்தில் தகப்பனுக்கு பிரச்சனை. திருமணம் செய்துகொண்டு இல்லறத்தை நடத்த ஆரம்பித்துவிட்டாலோ நமக்குப் பிரச்சனை. பின்பு மரிக்கும் பொழுதோ மனைவி பிள்ளைகளுக்கு பிரச்சனையை விட்டு செல்கிறோம். இப்படியாக நாம் பிரச்சனையிலே பிறந்து, வாழ்ந்து, பிரச்சனையிலே மரிக்கிறோம். பிரச்சனையில்லாத மனிதனை சந்திக்க முடிவதில்லை. எங்கும் யாவருக்குமுள்ள பொதுவான அம்சம் பிரச்சனைதான். பிரச்சனையை முற்றிலும் சமாளிக்க மனிதன் எத்தனையோ பிரயத்தனம் செய்கிறான். ஆனால் ஒரு பிரச்சனை தீர்ந்தால் மற்றொன்று வந்து விடுகிறது. ஏன் இந்தப் பிரச்சனைகள்? பிரச்சனைகளிலிருந்து மனிதனுக்கு விடுதலை கிடையாதா? என் வாழ்வில் நிம்மதி என்பது வராதா என்று குமுறும் பல்லாயிரக்கணக்கான இதயங்களை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

கண்ணுக்கு கண்ணான தன் ஒரே பிள்ளையை பறிகொடுத்துவிட்டு கதறும் தாயின் ஈனக்குரல்! தன் அருமை மைந்தன் விபத்தில் மடிய, உயிரற்ற அந்தச் சடலத்தைக் கட்டிப் பிடித்து குமுறி அழும் தகப்பனின் விம்மும் குரல் !! தாயையும், தகப்பனையும் இழந்து அனாதையாகிவிட்ட பிள்ளைகளின் நெஞ்சைப் பிளக்கும் கதறல் !!

கொடிய வியாதியின் கோரப் பற்களில் சிக்கி, வலிமை இழந்து, உருவழிந்து, நடைபிணமாகத் திரியும் எத்தனையோ ஆயிரமாயிரம் துர்பாக்கியசாலிகளின் அழும் குரல் !!

இவர்கள் அனைவரும் கேட்கும் ஒரே கேள்வி : ஏன் ? ஏன் இந்தப் பிரச்சனை ! இந்தப் பிரச்சனை தீர வழி இல்லையா? வாழ்வு என்பது இதுதானா? சாவு ஏன் வரவேண்டும்? மனிதன் செத்தபின் பிழைப்பானோ? கடவுள் இதை அறிவாரா? அறிந்தும் பின் இந்நிலையை மாற்ற முன் வராதது ஏன்? இவ்வுலகில் துன்மார்க்கர் சுக ஜீவியத்திலிருப்பது ஏன்? நீதிமான் கொடுமைப்படுத்தப்படுவது ஏன்? ஒரு குற்றமுமில்லாத நிரபராதி வஞ்சிக்கப்படுவது ஏன்? வருத்தம், பாரம், துயரம், சோகம், மரணம், நோய், ஏமாற்றம் இவைகள் உலகிலிருப்பது ஏன்? ஏன்? ஏன்? என்று கேட்கும் அனைவருக்கும், பொறுமைக்கு எடுத்துக்காட்டாம் நண்பன் யோபுவை அறிமுகம் செய்து வைக்கிறேன்.

யோபு எங்கே வாழ்ந்தான்? எப்பொழுது வாழ்ந்தவன்? என்று திட்டமாக கூற இயலாவிட்டாலும் அந்த யோபுவைப் பற்றிய புத்தகம் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்க முடியாது. இந்த கதாபாத்திரத்தை பரிசுத்த வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டு யோபு புத்தகத்தில் சந்திக்கலாம். மனித இதயத்தை நெகிழச் செய்யும் கதைகளில் உன்னதமான, தைரியம் நம்பிக்கை பலப்படும், ஐயமில்லை. ஏனெனில் நம்மைப்போலவே சோதிக்கப்பட்டவன், பலப்பல பிரச்சனைகளை அறிந்தவன். பொறுமையோடு பிரச்சினைகளை எதிர்த்து நின்று, முற்றும் முடிய விசுவாசத்தை காத்துக் கொண்ட வெற்றி வீரன்தான் யோபு. அவனுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை ஒரு குறிபிட்ட காலத்துக்கும், யுகத்துக்கும், இடத்துக்கும் உரியது அல்ல. அந்த பிரச்சனைகள் பொதுவானவைகள். ஆகவே, நண்பன் யோபு எப்படி பிரச்சனைகளை சமாளித்து வெற்றி கண்டான் என்று அவனுடைய அனுபவத்திலிருந்து நாம் அதை அறிந்து கொள்ளுவோம்.

**இப்பொழுது கதைக்குச் செல்வோம்.**

கதை என்றால் வெறும் கட்டுக்கதையல்ல. மனிதனுடைய சொந்த சரக்கல்ல. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். (2 பேதுரு 1:20,21). மேலும் பவுல் கூறுகிறார், "தேவனுடைய மனுஷன் தேறினவானாகவும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோ 3:16, 17).

ஆகையால் தான் இந்த வேத புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த யோபு கதையைப் படிப்பதில் மிகுந்த அக்கறை காட்டவேண்டிய அவசியமாயிருக்கிறது. ஏனோ தானோவென்று, இங்குமங்கும் கொஞ்சம் கேட்டு பின் விட்டு விடாமல், இந்த உன்னதமான கதையை முழுவதும் கேட்டு, இந்த கதையிலிருந்து



அநேக புத்தகங்ள்
அறிவைத் தரலாம்
ஆனால் ஒன்றே ஒன்று
தான் மனமாற்றத்தை
தரும் அதுதான் வேதாகமம்.

சிருஷ்டிப்பின் அதிசயங்கள்
தேவன் செயல்படுவதை
வெளிப்படுத்துகின்றன.
(சங்19:1,2)

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய பிரச்சனைகளிலிருந்து விடுபடும் மார்க்கத்தை அறிந்து, நீங்கள் விரும்பும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெறவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபமாகும்.

**எங்கே ! கதையை துவங்குவோமோ?**

“ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்” என்று கதை ஆரம்பிக்கிறது (யோபு 1:1). அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். அதனால் அந்த மனிதன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். (யோபு 1:2,3). மேலும் “உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்'' என்று தேவனால் நற்சாட்சி பெற்றவனாயிருந்தான். (யோபு 1:8).

இப்படி உலகப் பிரகாரமான சகல சம்பத்துக்களையும், தேவனுடைய தயையும் பெற்றவனாக, சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

''ஒரு நாள் தேவ புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபொழுது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான். கர்த்தர் சாத்தானைப் பார்த்து, நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்கு பிரதியுத்தரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான். கர்த்தர் சாத்தானை நோக்கி என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ, உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார். அதற்கு சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக, யோபு விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிறான்? நீர் அவனையும், அவன் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் பெருகப் பண்ணினீர். ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டனவையெல்லாம் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கானோ பாரும் என்றான். (யோபு 1:6-11).

தேவன் யோபுவின் விசுவாசத்தின் மீதுள்ள நம்பிக்கையினாலே அந்தச் சவாலை ஏற்றார். கர்த்தர் சாத்தானை நோக்கி ''இதோ அவனுக்கு உண்டானவை எல்லாம் உன் கையிலிருக்கிறது. அவன்மேல்

மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார். தேவன் இப்படி யோபுவை சாத்தான் சோதிக்க அனுமதி தந்தார்.

சாத்தான் புறப்பட்டு போய் தன் அழிக்கும் படலத்தை ஆரம்பித்தான். முதலில் யோபுவிடமிருந்து ஒட்டகம், ஆடு, மாடுகள் போன்ற எல்லா கால்நடைகளும் பறிக்கப்பட்டன. சபேயரும், கல்தேயரும் அவைகளை பிடித்துக்கொண்டு போய் விட்டனர். இரண்டாவது அடி, யோபு தன் அருமை பிள்ளைகளை இழந்தான். பெருங்காற்று அடித்து அனைவரும் மடிந்தனர். ஆனால் யோபுவோ இந்தச் சோதனையில் தோல்வி அடையவில்லை. அதற்கு மாறாக, ''நிர்வாணியாய் என்தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றான்" (1:21).

சாத்தான் தன் தோல்வியை ஒப்புக்கொண்டானா? இல்லை. கர்த்தரிடத்தில் அனுமதி பெற்று, மூன்றாவதாக யோபுவை கொடிய பருக்களால் வாதித்தான். யோபு ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான் (2:7,8). நான்காவதாக, சாத்தான், யோபுவின் மனைவியை ஏவி விடுகிறான். ''அப்பொழுது அவன் மனைவி அவனைப்பார்த்து, நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ, தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள் (2:9).

அடுத்த காட்சி, யோபுவைத்தேற்ற அவனது மூன்று நண்பர்களின் வருகை.

இவர்கள் யோபுவைத் தேற்றுவதாக எண்ணி, வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதைப் போன்று, "எல்லாம் உன் பாவத்தினால்தான் இந்த கஷ்டம் வந்திருக்கும்'' என்று அந்த உத்தமனான யோபுவின்மேல் குற்றச்சாட்டை சுமத்த ஆரம்பித்தனர். இந்த கதையின் பெரும் பகுதி, யோபுவுக்கும், அவன் மூன்று நண்பர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் ஆகும். இப்படி எல்லோராலும் கைவிடப்பட்டு எல்லாவற்றையும் இழந்தவனாக நம் யோபு இந்த அவல நிலைக்குள்ளாக்கப்பட்டும் நங்கூரமாகிய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தான்.

தன் நண்பர்களின் கண்ணோட்டத்தில் தவறு இருந்ததை யோபு அறிந்து இருந்தான். இருப்பினும், தனக்கு ஏற்பட்ட இந்த துர்பாக்கியமான நிலை ஏன் வந்தது என்று அறிந்தானில்லை. தன்

சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனிடத்தில் பேச வாஞ்சையாயிருந்தான். ஆனால் அவரை காண இயலவில்லை. கடந்த காலங்களை நினைவு கூர்ந்தவனாய் தற்போதைய நிலைமைக்கு தன்னை நொந்து கொண்டான். “அவர் என்னை கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்” என்றான் (13:15).

யோபு தன் மூன்று நண்பர்களிடம் பேசினான். ஆனால் அவர்கள் அவனுக்கு சரியான உத்தரவு கொடுக்கவில்லை.

அப்பொழுது கர்த்தர் : பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக, ‘‘அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துற இவன் யார்? இப்போதும் புருஷனைப் போல் இடைக்கட்டிக்கொள் : நான் உன்னைக் கேட்பேன், நீ எனக்கு உத்தரவு சொல்லு” என்றார். தேவன் கேட்ட கேள்விகளுக்கு யோபு மாத்திரமல்ல, தேவன் இல்லை என்று கூறும் ஒவ்வொரு நாஸ்திகனும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லாவிடில் தோல்வியை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இப்படியாக தேவன் பேசி, யோபுவின் கண்கள் திறக்கப்பட்டன.

**கடைசி காட்சி** : மகிழ்ச்சி ! ஆம் யோபுவின் வாழ்வில் வெற்றி !! அவன் விசுவாசத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி !!! அவன் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டது. கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்குமுன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்குத் தந்தருளினார். உண்மையிலே யோபுவின் சரித்திரம் ஓர் உணர்ச்சியூட்டும் உன்னதமான கதை. இதை நீங்கள் ஒவ்வொருவரும் படித்து பலனடையுங்கள்.



பாவம் நம்முடைய
ஆன்மிக சக்தியை
இழக்கச் செய்யும்;
பாவ அறிக்கை அதை
மீட்டுக் கொடுக்கும்.
நீதி 28:13

**டிசம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்**

1. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
2. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
3. B. கௌசந்த் – திருப்பூர்
4. V. ஷைனி – மதுரை
5. V. ஷாலி – மதுரை

# அவர் இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்

1. ஆபிரகாமிடம் நான் சர்வ வல்லமையுள்ள தேவன் (ஆதி. 17:1) என்று சொன்னார்.

2. நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனாய் இருக்கிறேன் (யாத் 3:6, மத் 22:31) என்று சொன்னார்.

3. இயேசுவானவர் உலகத்தில் இருந்தபோது நீர் என்னுடையக் குமாரன் (மத் 3:17 என்று சொன்னார். மேலும் நான் அவருக்குப் (இயேசுவுக்கு) பிதாவாயிருப்பேன் அவர் எனக்கு குமாரனாயிருப்பார் (எபி. 1:5) என்றும் சொன்னார். இப்படிப்பட்ட வாக்குதத்தமான வார்த்தையை தேவன் தேவதூதர்களில் யாருக்கும் சொல்லவில்லை (எபி. 1:5). மேலும் தேவன் இயேசுவை நோக்கி நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைப் பிறப்பித்தேன் (சங் 2:7) என்று சொல்லுகிறபடியினாலும் இயேசுவானவர் என் பிதா பரலோகத்தில் இருக்கிறார் (மத் 7:21) என்று சொல்லுகிறபடியினாலும் தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையே இருக்கிற உறவு ஒரு தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே இருக்கிற உறவைப்போன்றதாகும், ஆகையால் தேவன், இயேசு கிறிஸ்துவுக்குப் பிதா என்றும், தேவன் என்றும் அழைக்கப்படுகிறார்.

4. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் (2கொரி 1:3), என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர் (2கொரி 11:31).

5. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் (எபே 1:3)

6. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் (எபே 1:17)

7. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் (கொலோ 1:5)

8. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக (1பேது 1:3)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு இயேசுவானர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறபடியினாலும் (யோவா. 1:12), ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறபடியினாலும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் (கலா 3:26-27). இவ்விதமாய் தேவனுடைய



இவ்வுலகம்
வெற்றிக்கு
முடிசூட்டுகிறது
தேவனோ
விசுவாசத்திற்கு
முடிசூட்டுகிறார்.
(2 தீமோ 4:7,8)

பிள்ளைகளாய் இருக்கிற அநேக சகோதரருக்குள்ளே இயேசுவானவர் தேவனுடைய முதற்பேரான குமாரனாயிருக்கிறார் (ரோம. 8:29). மேற்கண்ட வசனங்களில் தேவன் இயேசுவுக்கு தகப்பனாயிருக்கிறார். என்றும் இயேசுவானவர் தேவனுக்கு குமாரனாயிருக்கிறார் என்றும் பார்க்கிறோம். ஆகையால் ஆள்தத்துவத்தில் இருவரும் ஒரே ஆள் இல்லை. பிதாவானவர் ஒரு ஆளாகவும் இயேசுவானவர் ஒரு ஆளாகவும் இருக்கிறார்கள். ஏனென்றால் தேவன் ஆவியும் ஆத்துமாவும் உடையவராய் இருக்கிறார். என்றும் இயேசுவானவரும் ஆவியும் ஆத்துமாவும் உடையவராய் இருக்கிறார். என்றும் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். ஆவியும் ஆத்துமாவும் உடையவர்கள் உள்ளான மனுஷரில் ஒரு ஆளாகவும் இருக்கிறார்கள். எனவே பிதாவும் குமாரனும் ஒரே ஆள் என்று சொல்லுவது தவறாகும்.

ஒரு ஆள், ஒருவருக்கு மகனாகவும் சிலபேருக்கு தகப்பனாகவும் இருக்கலாம். ஆனால் அதே ஆள் தகப்பன் என்ற உருவத்திலும் மகன் என்ற உருவத்திலும் ஒரே ஆளாக இருக்க முடியாது. கிறிஸ்துவ மார்க்கத்தில் அவதாரம் அதாவது உருவம் மாறிவருதல் என்பது

கிடையாது. தேவன் என்று சொன்னால் அவர் என்றைக்கும் தேவன்தான், குமாரன் என்று சொன்னால் அவர் என்றைக்கும் குமாரன் தான். இயேசுவானவர் என்றைக்கும் பூரணரானக்குமாரன் என்றும் (எபி. 7:28) குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார் (யோவா.8:35) என்றும் சொல்ப்பட்டிருக்கிறது. மேலும் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13:8) என்று சொல்லியிருக்கிறது. அதாவது இயேசு நேற்றும் இன்றும் என்றும் தேவனுடைய குமாரனாயிருக்கிறார். ஆகையால் இயேசுவானவர் என்றைக்கும் குமாரனாக இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறபடியினால் இயேசுவானவரே! பிதாவாக இருந்தார். இயேசுவே குமாரனாக வந்தார் இப்பொழுது இயேசுவே பரிசுத்த ஆவியாயிருக்கிறார். என்று சொல்லுவதும் தவறாகும். தேவன் என்றைக்கும் இயேசுவவுக்குப் பிதாவாகவும், இயேசுவானவர் என்றைக்கும் தேவனுடைய குமாரனாகவும் இருக்கிறார். ஆகையால் இருவரும் ஒரே ஆள் என்று சொல்வோமானால் யாராவது ஒருவரை மறுதலிக்கிறவர்களாக இருப்போம். பிதாவானவரே குமாரனாக வந்தார் என்று சொன்னால் குமாரனென்று தனியாக ஒருவர் இல்லை என்று சொல்லுகிறபடியினால் குமாரனை மறுதலிக்கிறவர்களாய் இருப்போம். அப்படியே இயேசுவானவரே பிதாவாயிருந்தார் பின்பு குமாரானாக வந்தார் என்று சொல்வோமாகில் பிதா என்கிற ஒருவர் தனியாக இல்லை என்று சொல்கிறபடியினால் பிதாவை மறுதலிக்கிறவர்களாய் இருப்போம். இப்படி பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே “அந்திக் கிறிஸ்து” ஆவான் (1யோவா 2 :22) ஆனால் தேவனுடைய பிள்ளைகள் பிதாவாகிய ஒரே தேவன் உண்டு என்றும், இயேசு கிறிஸ்து என்றும் ஒரே கர்த்தர் உண்டு என்றும் விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

– தொடரும்

**– சகோ. V. ஆசீர்வாதம்** ( திருவெற்றியூர்)

வேதாகமம் ஒரு திசைக்காட்டி அது எப்போதும் விசுவாசிக்கு சரியான திசையையே காட்டும் (சங் 119:105)



ஒரு சிறு முன்மாதிரிக்கூட கிறிஸ்துவுக்காக ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் (1 பேதுரு 5:1-3)

பாடம் 4

# கண்ணாரக் கண்ட சாட்சி

## Eye-witness Testimony

- Richard N. Ady

கடவுள் நம்பிக்கையுள்ளோரின் கூற்றுப்படி, புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகளை பரிசோதித்துப் போதிய நம்பத்தகுந்த கண்ணாரக் கண்ட சாட்சிகள் எதுவுமில்லை என்கின்றனர்.

எப்படியிருப்பினும், புதிய ஏற்பாடு ஆரம்பகாலத்தில் எழுதப்பட்டது என்கிற ஆதாரத்தைக் கொண்டு, மனதைத் தொடும் சாட்சியங்களை நாம் கொண்டுள்ளோம் என்று கண்டோம். இப்படியாக, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலக் கட்டத்தில் ஏராளமான கண்ணாரக் கண்ட சாட்சியங்கள் இருந்தன.

**அப்போஸ்தலர்கள் கண்ணாரக் கண்ட சாட்சிகள்**

புதிய ஏற்பாட்டின் படி, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் இயேசுவின் வாழ்க்கை வரலாறு, அற்புதங்கள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய எல்லாவற்றையும் கண்ணாரக் கண்ட சாட்சிகள். இயேசு சிலுவையிலே கொலை செய்யப்பட்டு சில வாரங்களே ஆகியிருந்த நிலையில், பெந்தெகோஸ்தே எனும் நாளில், பேதுரு, “இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.'' என்று அறிவித்தார் (அப்போஸ்தலர் 2:32).

அந்த நாள் துவங்கி, அப்போஸ்தலர்கள் போகுமிடமெல்லாம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை பிரசங்கித்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு, யூதர்களின் உயர்நீதி மன்றத்திற்கு முன்பாக விசாரணைக்காக நிறுத்தப்பட்ட போது, நியாயாதிபதிகளிடத்தில் பேதுரு, “நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்த சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்கு சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி” என்றார்கள் (அப் 5:30-32). (அப்போஸ்தலர் 3:15, 10:41யும் காண்க).

ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்குப் பிறகு, தரிசு பட்டணத்தானாகிய சவுலுக்கு இயேசு தரிசனமானார். சவுல் தமஸ்குப் பட்டணத்துக்குப் போய் அங்குள்ள கிறிஸ்தவர்களை கைது பண்ணி எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுவந்து விசாரிக்கும்படி சென்று கொண்டிருந்தான். திடீரென்று, இயேசுவைக் கண்டு, சவுல் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துவதை நிறுத்தி இயேசுவே மேசியா என அறிவிக்கத் துவங்கினார். உயிர்த்தெழுந்த **கிறிஸ்துவுக்கு சவுல் கண்ணாரக் கண்ட சாட்சி.** தரிசுப் பட்டணத்தானாகிய சவுல், புறஜாதிகளுக்கு (யூதர்களல்லாத ஜனங்களுக்கு ) அப்போஸ்தலனாகிய பவுலானார்.

யோவானும் கூட கண்ணாரக் கண்ட ஒரு சாட்சி. அவர், "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று எழுதினார் (1யோவான் 1:1)

சாலைவிதிகளை மதிப்போம். சாவினை தவீர்ப்போம்.



மது நாட்டுக்கும் வீட்டுக்கும் உயிருக்கும் கேடு

விபத்து என்பது உன்னை மட்டுமல்ல; உன்னை சார்ந்த அனைவரையும் பாதிக்கும்.

**ஜனங்களின் நடுவே நடந்த பேச்சு**

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஜனங்கள், இன்றைய ஜனங்களைப் போலவே பெரும்பாலும் இருந்துள்ளனர். அவர்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேச விரும்பினர். அந்நாட்களில் அவர்களுக்கு கணினி இயந்திரம், ( கம்பியூட்டர் ) டிவி மற்றும் வீடியோ போன்ற சாதனங்கள் மக்கள் மனதை திசை திருப்ப இருந்ததில்லையாதலால், இன்றைக்கு நாம் பேசுவதைக் காட்டிலும் அதிகமாகவே பேசியிருக்கக் கூடும். அவர்கள் இயேசுவைப் பற்றிப் பேசினார்கள்.

**மாற்கு**

இரண்டாவது சுவிசேஷப் புத்தகமாகிய மாற்குப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் "யோவான் மாற்கு", இயேசு கெத்சமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டபோது, கூட இருந்த ''வாலிபன்'' என்று கருதப்படுகிறது. மாற்கு, " ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்திக் கொண்டு அவர் (இயேசு) பின்னே போனான்;


அவனைப் பிடித்தார்கள்;'' என்று எழுதினார். இங்கே குறிப்பிடப்பட்ட ''வாலிபன்'' மாற்றாக இருந்திருப்பானேயானால், அவன் ஒரு கண்ணாரக் கண்ட சாட்சி.

ஏறத்தாழ கி.பி. 125-ல், பாபியா என்னும் கலை முன்னோடி ஒருவர், "மாற்கு எந்த தவறும் செய்யவில்லை" என்றும், பேதுரு இயேசுவைக் குறித்த ஒரு கண்ணாரக் கண்ட சாட்சியம் என எந்தவொரு "தவறான கருத்தையும்" உட்புகுத்தி எழுதியிருக்க மாட்டார்" என்று சொன்னார்.

இரேனியுவின் கூற்றுப்படி, "மாற்கு, சீமோன் பேதுரு குறித்து விளக்கமளித்தவனுமாகிய அவன், பேதுரு பிரசங்கித்தவைகளை எழுதி நமக்குக் கொடுத்திருக்கிறார்"; கி.பி. 180ல் அவர் பேதுருவின் கண்ணாரக் கண்ட சாட்சியத்தை இரேனியு குறிப்பிட்டுள்ளார்.

**லூக்கா**

மூன்றாவது நற்செய்தி புத்தகத்தை எழுதிய ஆசிரியர் லூக்கா, இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு ஒரு கண்கண்ட சாட்சியல்ல. எப்படியிருப்பினும், அவர் மிக உயர்ந்த பண்பாற்றலைக் கொண்டிருந்த ஒரு வரலாற்று ஆசிரியராதலால், மற்றவர்களின் கண்கண்ட சாட்சியங்களை அறிவிக்கிறார்.



நித்தியமானவற்றை
கெட்டியாக பிடியுங்கள்
இம்மைக்குரியவற்றை
தளர்த்தியாக பிடியுங்கள்
(பிலி 3)

**தனது சுவிசேஷ புத்தகத்தின் முகவுரையில், லூக்கா எழுதியதாவது:**

''மகா கனம் பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று'' (லூக்கா 1:1-4).

லூக்கா கொடுக்கிற விவரத்திலிருந்து, இயேசுவின் பிறப்பு மற்றும் இளம்பிராய வளர்ச்சி ஆகியவை குறித்து அவரது தாய் மரியாளிடத்தில் விசாரித்து அறிந்திருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரிகிறது. இயேசுவின் வருகை குறித்து காபிரியேல் தூதன்

அறிவிக்கும் போது, அவள் அங்கே இருந்தாள். அவள் கருத்தரிக்கையில் அங்கே இருந்தாள். இயேசு பிறந்து வைக்கோல் மீது கிடத்தப்பட்டிருந்த போதும், மேய்ப்பவர்கள் குழந்தை இயேசுவை முன்னணையில் வந்து பார்க்கிறபோதும், அவள் அங்கே இருந்தாள். இயேசு விருத்தசேதனம் பண்ணப்பட்ட போதும், எருசலேம் தேவாலயத்தில் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோதும் மரியாள் இருந்தாள். பஸ்கா பண்டிகையில் தன் குடும்பமாக சிறுவனாகிய இயேசு கலந்து கொண்டபோதும், தேவாலயத்தில் போதகமார்களோடு இயேசு கேள்விகள் கேட்கு போதும், பதில் சொல்லும் போதும் அவள் ஆச்சரியப்பட்டவளாய் அங்கே இருந்தாள். இயேசுவின் வாழ்வின் பெரும்பகுதி அவள் அவருடன் இருந்தாள். இவைகளுக்கு லூக்காவே கண்கண்ட சாட்சியாயிருக்கவில்லையெனினும், இயேசுவின் தாயாகிய மரியாள், இயேசுவின் சகோதரர்களாகிய யாக்கோபு, யூதா, மகதலேனா மரியாள், மற்றொரு மரியாள், சலோமி, இயேசுவோடு பயணம் பண்ணின வெறுமையாயிருந்த கல்லறையை சாட்சியிட்ட மற்றவர்கள் ஆகிய அனைவரின் கண்கண்ட சாட்சியங்களை உண்மையாய் அவர் எழுதினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, லூக்கா, பவுல் அப்போஸ்தலனுடன் பயணம் பண்ணின ‘‘பிரியமான வைத்தியன்”. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், அவரது கண்கண்ட சாட்சியங்களே மிக அதிகமாக எழுதப்பட்டுள்ளன. பின் வரும் வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள தன்னிலைப் பெயர் சொற்கள் அனைத்துமே அவரைக் குறிப்பிடுகின்ற, அப் 16:6-40; 20:6-38; 21:1-15; 27:1-44; மற்றும் 28:1-31. லூக்கா, பவுலுடன் இரண்டு சுவிசேஷப் பயணங்களில் சென்றவர்; ரோமாபுரிக்கு பவுலோடு கப்பல் பயணத்தில் சென்றவர்; சிறை வைக்கப்பட்டிருக்கையில் அவருக்கு பணிவிடை செய்தவர். மறுபடியும் தமஸ்குப் பட்டணத்துக்கு போய்க் கொண்டிருக்கையில் வழியிலே இயேசு தனக்கு தரிசனமானதை பவுல் சொல்லக் கேட்டவர் லூக்கா.

இரேனியு, ‘‘லூக்கா, பவுலை பின்பற்றியவர், தனது ஆசிரியரின் சுவிசேஷ பிரசங்கங்களை புத்தமாக வெளியிட்டார்” என்று எழுதுகிறார். பவுல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு கண்ணாரக்கண்ட சாட்சி, பவுலின் கண்கண்ட அந்த சாட்சியத்தை லூக்கா எழுதினார்.

### சுவிசேஷம் கட்டுக்கதைகளால் மூடப்பட்டவைகளா?

பெரும்பாலான நிபுணர்கள் மாற்கு சுவிசேஷப் புத்தகம் 70-ம் ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும், 80ம்

ஆண்டுகளில் எழுதப்பட்டதாகவும் கூறுகின்றனர். கடவுள் நம்பிக்கையற்றவர் சுவிசேஷப் புத்தகங்கள் இரண்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டதாகவும், சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்பட்ட நேரத்தில், வரலாற்று உண்மைகளெல்லாம் கட்டுக்கதைகளால் மூடி மறைக்கப்பட்டிருந்தது என்கின்றனர்.

லூக்கா எழுதின புத்தகம் கி.பி. 80க்கு வெகு காலத்துக்கு முன்பாகவே எழுதப்பட்டது என நம்புவதற்கு நல்ல காரணமும் இருக்கிறது. பவுல் ரோமாபுரி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டதுடன் அப்போஸ்தலர் நடபடிகள் முடிவு பெறுகிறது. இது அப்போஸ்தலர் நடபடிகள் கி.பி. 62 வாக்கில், பவுல் விடுதலை பெற்ற நேரத்தில் எழுதப்பட்டது என ஆலோசிக்க வைக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாவது பிரபந்தம் என்பதால், இரண்டு பாகத்தில், லூக்கா சுவிசேஷம் கி.பி. 62க்கு முன்பாகவே (முதலாம் பிரபந்தம்) எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மாற்குப் புத்தகம் தான் சுவிசேஷங்களிலேயே முதலாவது எழுதப்பட்ட புத்தகம், என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. கி.பி. 30-களில் மாற்கு எழுதியிருப்பாரானால், அவருடைய புத்தகம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவை முப்பது வருடங்களில் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். எழுதப்பட்ட பதிவேடுகள் சரியென எடுத்துக் கொள்வதற்கு இன்னமும் ஏராளமான சாட்சியங்கள் இருந்தன. ஆதலால், புனைக்கதைகளையும் கட்டுக்கதைகளையும் சேர்த்து உண்மையை திரித்துக் கூறியிருந்தாலும் கூட அந்த சாட்சியங்கள் போதுமானவை.

சுவிசேஷச் செய்திகளெல்லாம் எழுதப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன் வாய்மொழியாகத்தான் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தனர் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்.

### விசுவாச அறிக்கைகளும் ஆதிகால பாடல்களும்

பவுல் தனது நிரூபங்களை நற்செய்தி நூல்கள் எழுதப்படுவதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, கி.பி.



மிதமான
வாகன பயணம்
மீதமாகும்
வாழ்க்கை பயணம்

விபத்து என்பது
தானாகவோ, திடிரென்று
ஏற்படும் ஒன்றல்ல.
அது நம் தவறுகளால்
ஏற்படுகிறது.

40 களில் எழுதத்துவங்கினார். அவர் தமது நிரூபங்கள் சிலவற்றில் பவுலால் ஒன்றுபடுத்தப்பட்ட பாடல்களும் விசுவாச அறிக்கைகளும் சபையில் பயன்படுத்தப்பட்டன. இந்த பாடல்களும் அறிக்கைகளும் கவிதை நடையில் இருப்பதைக் காணலாம். இன்று பிள்ளைகள் ஓசை நயத்தோடும் பாடலோடும் கற்றுக் கொள்வது போல, ஆதிக்கிறிஸ்தவர்கள் இதே மாதிரியான நுணுக்கங்களின் அடிப்படையில் கற்றுக் கொள்ள சத்தியத்தை மனப்பாடம் செய்தனர்.

ஆதிசபையின் மிக முக்கியமான உபதேசங்களில் சில, கிறிஸ்தவப் பாடல்கள் மூலமே வெளிப்படுத்தப்பட்டன. பவுலின் நிரூபங்களில் மட்டுமே பாடல்கள் பாதுகாத்து வைக்கப்ட்டன. உதாரணங்கள், **எபேசியர் 5:14; பிலிப்பியர் 2:6 – 11; கொலேசெயர் 1:15 – 20; மற்றும் 1 தீமோத்தேயு 3:16**-ல் காணப்படுகிறது. **பிலிப்பியரில்** சொல்லப்படுகிற பாடலில் இயேசு கிறிஸ்து சுபாவத்தில் தேவன் என்று உறுதிப்படுத்துகிறது. கொலேசெயரில் கிறிஸ்துவை ''அதரிசனமான தேவனுடைய தற்சூரூபம்'' என்று காட்டுகிறது. “அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று. இப்படிப்பட்ட பாடல்கள் மூலம் முதல் நூற்றாண்டின் முன்பகுதியில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து என்ன எண்ணம் இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது.

### 1 கொரிந்தியர் 15:3–8

**1 கொரிந்தியர் 15:3–8**-ல் விசுவாச அறிக்கையின் குறிப்பிடத்தக்க முக்கியப் பகுதி பவுலால் குறிப்பிடப்படுவதைக் காணலாம். இங்கே பவுல், நுட்பமான ஒரு பதத்தைப் பயன்படுத்தியிருப்பது, ஒரு குறிப்பிட்ட அமைப்பில் வாய்மொழி பாரம்பரியத்துடன் தன்னிடத்தில் வந்ததற்கேற்ப கடந்து போனார் என்பதை குறிப்பிட்டுக் காட்டுகிறது. அவர், ''நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின் படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன் பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்திருக்கிறார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன் பின்பு

அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகால பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்".

இந்த அறிக்கையின் முதல் பகுதி (வசனம் 3-5), மனப்பாடம் பண்ண ஏதுவாக பாடல் வடிவத்தில் எழுதப்பட்டது. இரண்டாம் பகுதி (வசனங்கள் 6-8)-ல் ''கேபாவை'' (பேதுருவின் அராமிக் பெயர்) குறிப்பிட்டு மேலும் "பன்னிருவர்," "எழுப்பப்பட்டார்," "மூன்றாம் நாள்" போன்ற தொன்மை வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகள் ஆரம்ப காலத்தை விவாதிக்கிறது.

இந்த விசுவாச வாக்கியங்களை பவுல் எப்பொழுது பெற்றார்? இயேசு கி.பி.30-ல் சிலுவையில் அறையப்பட்டிருப்பாரானால், பவுலுக்கு (தரிசுப் பட்டணத்தானாகிய சவுலுக்கு) கி.பி. 32-ல் தரிசனமானார். மூன்று நாட்களுக்குப் பிறகு, தமஸ்குவில் பவுல் அனனியா மூலம் திருமுழுக்கு பெற்று, சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார், (அப்போஸ்தலர் 19:19-20). ஏறத்தாழ கி.பி. 35-ல், பவுல் அப்போஸ்தலர்களிடம் எருசலேமிலே தனது காலத்தைக் கழித்தார், (கலாத்தியர் 1:18,19). இந்தக் காலங்களிலே, அவருக்கு சபையில் பயன்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கை கொடுக்கப்பட்டது. பவுல் ஏறத்தாழ இரண்டிலிருந்து ஐந்து வருடக் காலக்கட்டத்தில் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்ட அறிக்கையை பவுல் பெற்றுக்கொண்டார்.

**முடிவுரை**

சாட்சியங்களை நாம் பரிசோதித்ததில், உண்மையில் இயேசு என்று பெயரிடப்பட்ட ஒரு மனுஷன் இருந்தார் என்பதையும், அவர் பிரசங்கம் பண்ணி வியாதிகளை குணமாக்கி, முதல் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் இஸ்ரவேல் தேசத்தில் மரித்தார் என்பதையும் தெளிவாகக் காணுகிறோம். அவர் உயிர்த்தெழுந்த பின் நூற்றுக்கணக்கான கண்கண்ட சாட்சியங்களும், அவரைக் கண்டார்கள், சிலர் தொட்டுக்கூடப் பார்த்தார்கள். உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தரிசுப் பட்டணத்தானாகிய சவுலுக்கும் தமஸ்குவுக்குப் போகிற வழியில் தரிசனமாகி, கொலைகாரனாக இருந்தவன் அப்போஸ்தலனாகிய பவுலாக மாற்றப்பட்டார்.

புதிய ஏற்பாட்டின் பாகங்களிலிருந்து, மிகவும் ஆரம்ப கால பதிவுகளை அடையாளம் காணலாம், கட்டுக் கதைகளுக்கு போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை என்றும் அறியலாம்.

# தேடிச் சென்று தீமையில் சிக்கலாமா

உயிர்கொல்லி நோய்களில் முதன்மையானது புற்றுநோய். இதனால் ஏற்படும் பாதிப்புகள், அதன் சிகிச்சை முறைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, பிப்., 4ம் தேதி உலக கேன்சர் தினம் கடைபிடிக்கப்படுகிறது.நுரையீரல், மார்பகம், தோல், வயிறு, நாக்கு, தொண்டை புற்றுநோய் என பல வகைகள் உள்ளன. புற்றுநோய், உடலின் ஒரு செல்லில் இருந்து மற்றொரு செல்லுக்கு பரவுகிறது. இதை கட்டுப்படுத்த முடியாததால், உடலின் அனைத்து உறுப்புகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**சிக்சை முறை**

புற்றுநோயின் வகை, அதன் நிலை, வயது, உடல்நிலை போன்றவற்றை பொறுத்து சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ரேடியேஷன், கீமோதெரபி,இம்மினோ தெரபி,ஹார்மோன் தெரபி,ஜென் தெரபி உள்ளிட்ட சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுக்கின்றன. புற்றுநோயால் ஆண்டுதோறும் 76 லட்சம் பேர் இறக்கின்றனர். இது உலகில், ஆண்டுதோறும் ஏற்படும் உயிரிழப்பில் 13 சதவீதம். புற்றுநோயால் இறப்பவர்களில் 70 சதவீதம் பேர், ஏழை மற்றும் நடுத்தர வருமானம் உடைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. துவக்கத்திலேயே முறையான சிகிச்சை மேற்கொண்டால், 40 சதவீதத்தை தடுக்க முடியும். இதில் மார்பக புற்றுநோய், குடல் மற்றும் தொண்டை புற்றுநோய் ஆகியவையும் 4 முறைகளை கடைபிடிக்க வேண்டம். முன்னரே தடுப்பது, ஆரம்பக்கட்டத்திலேயே தடுப்பது,பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆகியவை மூலம் புற்றுநோய் வராமல் தடுக்கவும் முடியும்.

**ஏன் புற்றுநோய்**

புற்றுநோய்க்கு முதல் எதிரியே புகையிலை தான். வாய் மற்றும் தொண்டை புற்றுநோய் ஏற்பட இதுவே காரணம். இந்தியாவில், புகையிலை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. என்னதான், சிகரெட் அட்டையில் எச்சரிக்கை படம் ஒட்டப்பட்டிருந்தாலும், அது யாரையும் திருத்துவதாக தெரியவில்லை. பல இளைஞர்கள் புகைப்படத்தை, ஒரு ‘ ஸ்டைலாக ’ நினைத்து பாதிப்புக்குள்ளாகின்றனர்.

**எப்படி தடுப்பது**

ஆல்கஹால், புகையிலை பயன்படுத்துவதை அறவே ஒழிக்க வேண்டும். சத்தான காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி அவசியம். சீரான உடல் எடையை கடைபிடிக்க வேண்டும். தூாசியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களில் விறகு உள்ளிட்ட திடப்பொருட்களை பயன்னடுத்தி பாதுகாப்பது அவசியம்.

# ஆண்டவரின் தரிசனம் – மகதலேனாமரியாள் 1

**வசனப்பகுதி : மத் 28, மாற் 16, லூக் 24 , யோவான் 20**

**சம்பவ சுருக்கம்** : உயிர்ந்தெழுந்த பின் ஆண்டவர் நிறைய தருணங்களில், நிறைய பேருக்கு தரிசனம் ஆனார். அவற்றுள் சில முக்கியமானவற்றை பார்ப்போம் மகதலேனா மரியாள் , யாக்கோபின் தாயாகிய மரியாள், சலோமே, யோவன்னாள் என்பவர்கள் ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதல் நாள் விடிந்து வருகையில் ஆண்டவரை வைத்திருந்த கல்லறைக்கு சென்றனர். கல்லறையின் வாசலில் அடைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய கல் எடுத்து போட்டிருக்க கண்டார்கள். உள்ளே கர்த்தருடைய தூதன் வெள்ளையங்கி தரித்து, ஆண்டவர் இங்கே இல்லை அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் என்றார். அதை கேட்ட பெண்கள் ஓடிப்போய் அப்போஸ்தலருக்கு அறிவித்தார்கள். பெண்கள் சொன்னது அவர்களுக்கு வீண் பேச்சாக தோன்றினாலும், பேதுருவும் யோவானும் ஓடி கல்லறைக்கு வந்து அந்த



பெண்கள் சொன்னபடியே கண்டார்கள். எல்லாரும் அந்த இடத்தை விட்டு போனபின்பும் மகதலேனா மரியாள் மட்டும் கல்லறையின் அருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். பின்பு கல்லறையில் குனிந்து கல்லறைக்குள்ளே ஆண்டவரின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் வெள்ளை உடை தரித்த இரண்டு தூதர்கள் தலை மாட்டில் ஒருவரும், கால்மாட்டில் ஒருவருமாக உட்கார்ந்திருக்கிறதை கண்டாள். அவர்கள் அவளை நோக்கி, ஏன் அழுகிறாய் என்றார்கள். அவளோ என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்கு தெரியலையே என்றாள். அவளுக்கு பின்னாக ஆண்டவர் இயேசு நின்றிருந்தார். ஆனாலும் அது ஆண்டவர் என அவள் அறியவில்லை. ஆண்டவர் அவளை பார்த்து ஏன் அழுகிறாய் என்றார். அவள் தோட்டக்காரர் என்று நினைத்து, ஐயா நீர் அவரை எடுத்துக் கொண்டு போனால் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன் என்றாள். ஆண்டவர் அவளை பார்த்து மரியாளே என்றார். அவள் ரபூனி என்றாள். அதற்கு போதகரே என்று அர்த்தம். நீ போய் நீ கண்டதையும் நான் சொன்னதையும் என் சகோதரருக்கு (அப்போஸ்தலருக்கு) அறிவி என்றார். அவள் அறிவித்தாள். இந்த மகதலேனாமரியாள் உயிர்தெழுந்த ஆண்டவரை முதலில் தரிசித்த பாக்கியம் பெற்றாள்.

டியர் குட்டீஸ் ! ஆண்டவர் உயர்ந்த பின் அவரை கண்ணீரோடும், அக்கறையோடும் தேடின மகதலேனா மரியாள் முதலில் தரிசித்தாள். நாமும் ஆண்டவரை ஏதோ கடமைக்காக, வேறு வழியின்றி தேடாமல் ஆசையாக, ஆர்வமாக தேட வேண்டும். சபைக்கு, கூட்டத்திற்கு போக வேண்டும் என்றாள் நம் பெற்றோருக்கு முன்பாக நாம் ஆயத்தமாகிவிட வேண்டும். அது தான் நமக்கு ஆண்டவர் மீதுள்ள ஆசையை காட்டும்.

**மனன வசனம்** : மத்தேயு 18:20

''இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்றார்"

# ஆண்டவரின் தரிசனம் – எம்மாவு வழியில் 2

வசன பகுதி : லூக் 24:13–35

**சம்பவ சுருக்கம் :**

ஆண்டவர் தரிசனமான அன்றைய தினமே, சீடர்களில் இரண்டு பேர் எருசலேமிருந்து எட்டுமைல் தூரமுள்ள எம்மாவு என்ற கிராமத்துக்கு போனார்கள். அவர்கள் ஆண்டவரின் உயிர்த்தெழுதல் மற்றும் நடந்த காரியங்களை பேசிக்கொண்டே நடந்து போகையில், ஆண்டவர் இயேசு தாமே அவர்களுடன் கூட நடந்துபோனார். அவர்கள் கண்கள் தங்களுடன் வருகிறவர் இயேசு என்று



அறியாதபடிக்கு மறைக்கப்பட்டிருந்தது. அவர்கள் பேசுகிற காரியம் என்ன வென்று இயேசு கேட்டார். அந்த இருவரில் ஒருவராகிய கிலேயாப்பா என்பவர் ஆண்டவர் இயேசுவை பற்றியும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும், அதிகாலையில் பெண்களின் கல்லறைக்கு சென்று தேவதூதரை தரித்தோம் என்று பிரமிக்க வைத்தார்கள் என்பதையும், எங்களிலும் சிலர் போய் அவ்வாறே கண்டார்கள். அவரையோ (இயேசுவை) காணவில்லை என்றார். ஆண்டவர் அவர்களை கடிந்துக்கொண்டு, தம்மை பற்றி தீர்க்க தரிசிகள் சொன்ன யாவற்றையும் விவரமாக அவர்களுக்கு போதித்தார். சாயங்காலமானபோது அவர்கள் அவரை தங்களுடனே இருக்கும்படி வேண்டிக்கொண்டனர். அவர்கள் பந்தியிருக்கையில் ஆண்டவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதை பிட்டு அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள். அவர் மறைந்துப்போனார். அவர்கள் வழியிலே நம்முடன் அவர் பேசுகையில் நம்முடைய இருதயம் கொழுந்துவிட்டுஎரிய வில்லையா என தங்களுக்குள் பேசிக்கொண்டு அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமிற்கு திரும்பி வந்து, வழியிலே நடந்தவைகளையும், அவர்களுக்கு அவர் தரிசனமானதையும் அப்போஸ்தலருக்கு சொன்னார்கள்.

டியர் குட்டீஸ் ! நிறைய நேரங்களில் நாமும் நம்முடைய வாழ்க்கையில் அல்லது நம்மை சுற்றி நடப்பவைகளை நினைத்துக்கொண்டு, எப்பொழுதுமே நினைத்துக் கொண்டிருக்க வேண்டிய தேவனுடைய வார்த்தைகளை மறந்து போகிறோம். அதினால் தேவ சித்தத்தை புரிந்துகொள்ள முடியாமல் போகிறது. அதனால் குட்டீஸ் ! தினமும் ஒரு வசனத்தையாவது மனப்பாடம் செய்வோம். தேவ சித்தம் செய்து, தேவ கிருபை பெறுவோம்.

**மனன வசனம் :**

“சங்கீதம் 119:11 நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்”.

# ஆண்டவரின் தரிசனம் : தோமா 3

வசனபகுதி : யோவான் 20:19-29

**சம்பவ சுருக்கம் :**

வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக, பிதா என்னை



அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார். இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை. மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என்விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிக்குள்ளே இருந்தார்கள், தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான், கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி, நீ உன் விரலை இங்கே நீட்டி,என் கைகளைப்பார் , உன் கையை நீட்டி , என் விலாவிலேபோடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமாவோ: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். இயேசுவோ! தோமாவோ, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

டியர் குட்டீஸ் ! நாம் எந்த காரணங்களுக்காகவும் நமது ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்தை குறைத்துவிடக்கூடாது. நம்மை சுற்றி நடப்பவைகளை கண்டு நாம்

ஆண்டவர் மேல் விசுவாசம் வைக்கிறவர்களாக இராமல், தேவனுடைய வார்த்தையினாலே அவரை விசுவாசிக்கிறவர்களாயிருப்போம். ஏனெனில், தேவன் தரிசித்து நடப்பவரை அல்ல, விசுவாசித்து நடப்பவரின் மேலே பிரியமாயிருக்கிறார். நாம் அவ்வாறே நடந்து தேவபிரியம் பெறுவோம்.

**மனன வசனம் :** 2 கொரி 5:6

"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

# மத்தியாஸ் 4

**வசன பகுதி மத் 27, மாற் 15, லூக் 23**

**சம்பவ சுருக்கம் :**

ஆண்டவராகிய இயேசு உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாளாவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி தேவனுடைய ராஜ்ஜியத்தை குறித்து பேசி தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். மேலும், எருசலேமில் பிதாவின் வாக்குதத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். மேலும், அவர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் பரமேறி சென்றார் அப்பொழுது அப்போஸ்தலர்களிடம் தேவதூதர்கள் வந்து ஏன் வானத்தை அன்னார்ந்து பார்க்கிறீர்கள் கிறிஸ்து எப்படி பிரதியட்சமாக சென்றாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். அப்பொழுது அவர்கள் ஒரு ஓய்வு நாள் தூரமிருக்கிற ஒலிவமலையிலிருந்து எருசலேமிற்கு திரும்பி போனார்கள். அங்கே மேல்வீட்டிலே



அவர்கள் ஏறக்குறைய 120 பேருடன். கூடி ஜெபித்தார்கள் அப்பொழுது பேதுரு எழுந்து நின்று இயேசுவை பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாஸ் காரியோத்தை குறித்து பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாக்கினால் சொன்ன வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக அவனுடைய (யூதாஸின்) கண்காணிப்பை வெறொருவன் பெறக்கடவன் என்று எழுதியிருக்கிறபடி யூதாஸிற்கு பதிலாக 12 வது அப்போஸ்தலனாக ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவெடுத்தார்கள். அதற்கு தகுதி ஆண்டவர் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்ற முதல் பரமேறி சென்றவரை வாழ்ந்த காலத்தில் தங்களுடனே இருந்த ஒருவரை சாட்சியாக ஏற்படுத்த வேண்டும் என்றான். அப்பொழுது அந்த தகுதிகள் உடைய யோசேப்பு மற்றும் மத்தியா ஆகிய இரண்டு பேரில் ஒருவரை

தேர்ந்தெடுக்க ஜெபம் செய்து சீட்டு போட்டார்கள். சீட்டு மத்தியாவின் பேரில் விழுந்தது. மத்தியாவை அப்போஸ்தலனாக தங்களுடனே சேர்த்துக் கொண்டார்கள்.

டியர் குட்டீஸ்! அப்போஸ்தலாரவது என்றால் அது சாதரணமல்ல 120 பேரில் 2 பேருக்குதான் அந்த தகுதி இருந்தது. அதிலும் தேவன் ஒருவரை தான் தேர்ந்தெடுத்தார். ஏனெனில் எல்லோரும் அப்போஸ்தலராக முடியாது என்பதை நாம் உணரவே அப்படி செய்தார். நாம் "நம்முடைய தேவனுடைய பிள்ளை" என்ற ஸ்தானத்தை இழந்து போகதபடி ஜாக்கிரதையாக இருக்க யூதாஸ் ஒரு எச்சரிப்பின் பாடமாக இருக்கிறார். ஆகையால் கவனமாக இருக்க வேண்டும்.

**மனன வசனம்** 1 தீமோ 3:15

"நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு."

## நீங்கள் ஏன் திருச்சபையின் ஒவ்வொரு கூட்டங்களிலும் பங்குபெற வேண்டும்?

**10 காரணங்கள்**

1. இயேசுவுடன் இருக்கும்படியாக (மத் 18:20)
2. இயேசுவில் மட்டுமே கிடைக்கக்கூடிய தனிப்பட்ட சமாதானம் மற்றும் திருப்திக்காக (பிலி 4:7)
3. நமக்காக தேவனுடைய வசனம் திறக்கப்படும்படியாக (லூக் 24:45)
4. பரிசுத்த ஆவியானவரை அவித்துப் போடாதிருக்கும் படியாக (1 தெச 5:19)
5. ஆறுதலையும், ஐக்கியத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக (எபி 10:24)
6. நம்முடைய விசுவாசத்திற்கு உணவளித்து, பயிற்றுவிக்க (ரோ 10:17).
7. நம் வாழ்வையை மாற்றக்கூடிய அந்த அதிசய தருணத்தை தவறவிடாமல் இருக்க (யோ 20:19,24,26-28).
8. நம்முடைய ஆவிக்குரிய அனலை பாதுகாத்துக் கொள்ள (மத் 24:12).
9. நம்முடைய ஆவிக்குரிய பசியை திருப்திப்படுத்தும்படி (மத் 5:6)
10. ஏனெனில், ஆண்டவர் திரும்ப வரும்போது நான் அங்கேதான் இருக்க விரும்புகிறேன். (மாற்கு 13:32,33)



## இம்மாதக் கேள்விகள்

1. இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என சிந்தித்தது யார்?
2. சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் அவர் யார்?
3. நீங்கள் எருசலேமில் காத்திருங்கள் என ஆண்டவர் யாரிடம் சொன்னார்?
4. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றவர்களுக்கு பேதுருவின் பதிலென்ன?
5. ஊத்ஸ் தேசத்தான் யார்?
6. பிதாவையும் குமாரானையும் மறுதலிக்கிறவன் யார்?
7. பூமியெங்கும் உலாவி அதில் சுற்றி திரிந்து வருகிறேன் என்றவன் யார்?
8. தேவன் தமக்கு கீழ்படிகிறவர்களுக்கு யாரை தந்தருளுவார்?
9. தன்னை அகாலபிறவி என குறிப்பிடுபவர் யார்?
10. அன்பிற்கும் நற்கிரியைக்கும் ஏவப்படும்படி நாம் எதனை விட்டுவிடக்கூடாது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 28-2-13**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதலில் தரிசித்தது யார்?
2. எம்மாவுவிற்கும் எருசலேமிற்கும் உள்ள தொலைவு என்ன?
3. ஆண்டவரை பார்த்து விசுவாசிக்க ஆசைப்பட்டது யார்?
4. அப்போஸ்தலராக ஒருவருடைய தகுதி என்ன?
5. யூதாஸிடம் இருந்து நாம் பெறும் எச்சரிக்கை என்ன?
6. ரபூனி என்றால் அர்த்தம் என்ன?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 28-2-13**

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோதரி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

1. யாத் 20 : 6, உபா 5 : 10
2. உபா 6 : 5
3. சங் 97 : 10
4. யோவான் 14 : 15
5. 1 யோவான் 4 : 18
6. வெளி 2 : 4
7. 2கொரி 8 : 7, 8
8. யோவான் 21 : 15
9. 1யோவான் 4 : 8
10. ரோமர் 5 : 5

## ஜனவரி மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. P. சாம் – மதுரை
2. B. கௌசந்த் – திருப்பூர்
3. P. ஜெபக்கனி – மதுரை
4. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
5. V. ஷைனி – மதுரை
6. V. ஷாலி – மதுரை
7. R. சேம் – உக்கிரன்கோட்டை
8. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
9. Y. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை

## ஜனவரி மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
2. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
3. Mrs. மேரி ராஜ் – மதுரை
4. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
5. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
6. G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
7. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
8. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
11. A. சந்திரா – மதுரை
12. Mrs. ஹெலன் திலக் – மதுரை
13. Mrs. குணசுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
14. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
15. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
16. Mrs. கேற்றி செல்லத்துரை – தாம்பரம்
17. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
18. C. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
19. B. சிந்தனை மலர் – ஆம்பூர்
20. M. வசந்தா கெனசரேத் – ஆம்பூர்
21. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
22. Mrs. ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ் –மதுரை
23. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
24. J. விஜய் – வளர்நகர்
25. P. சூரியபிரியா – திருமங்கலம்
26. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
27. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
28. R. சரோஜா – தென்கலம்
29. Mrs. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
30. Mrs. ஞானசுந்தரி – போத்தனூர்
31. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
32. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
33. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
34. B. ஸ்டெல்லா பவுனம்பாள் –மணச்சநல்லர்
35. Sis. லிசி ராஜசேகரி – செங்கல்பட்டு
36. S.M. தவமணி தேவி – திருப்பூர்
37. R. இளஞ்செழியன் – கள்ளக்குறிச்சி
38. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
39. Y. ஜெயசுதா – சென்னை
40. 2ம் ஆண்டு மாணவர்கள் –செட்டிபாளையம்
41. Mrs. இந்திர மங்கள்ராஜ் – வடவள்ளி
42. Mrs. G.A. டேவி – மதுரை
43. R. பால்ஜெயராஜ் – சென்னை
44. R. மரிய ஜோசப் – சென்னை
45. Mrs. கரோலின் சீலன் – திண்டுக்கல்

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**